Teachers in panchayat union elementary schools

*202 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to change the present procedure of appointing teachers in panchayat union elementary schoosl, and

(b) if so, when it will be implemented?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

திரு. பெ. சீனிவாசன் : அப்பாயின்டிங் கமிட்டியில் தொகுதி சட்ட மன்ற உறுப்பினருக்கு இடம் இல்லை. ஆண்டு ஆரம்பத்தில் ஆசிரியர்களை மாற்றம் செய்யும் கமிட்டியில் மாத்திரம் சட்ட மன்ற உறுப்பினருக்கு இடம் இருக்கிறது. அப்பாயின்ட்மென்ட் கமிட்டியிலும் சட்ட மன்ற உறுப்பினரை அனுமதிக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : அத்தகைய உத்தேசம் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, an ad hoc committee now appointed under the Chairmanship of Sub-Collectors to deal with the transfer of teachers, is really doing good and satisfactory work. But with regard to the appointment of teachers, we find a lot of corruption which has almost become a business in the Panchayat Union.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திலே குற்றம் சாட்டிப் பேசக்கூடாது. கேள்வியை நேராகப் போடுங்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, just as we have an ad hoc committee to deal with the transfer of teachers, will the Government appoint another ad hoc committee and permit M.L.A.s to be members of that committee so that they can make appointments more satisfactorily and useful?

THE HON. THIRU M. MUTHUSWAMY : Sir, we have no such proposals.

திரு. கே. பி. எஸ். மணி : தற்போது பஞ்சாயத்து யூனியன்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் தலைவர் அவர்களும், சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஆர்.டி.ஓ. அவர்களும் சேர்ந்து தான் பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்களை நியமிப்பதும், அவர்களை மாற்றம் செய்வதும் நடைபெற்று வருகிறது. அந்த முறையிலே ஏதாவது தவறு நடந்திருக்கிறது என்று அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : இப்போது இருக்கிற திட்டத்தை மாற்றுவதாக எண்ணம் இல்லை. கடந்த காலத்தில் புகார்கள் வந்த முறையில் சிலபல முறைகளை மாறுபாடு செய்து அந்த முறை பின்பற்றப் பட்டு வருகிறது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சிதம்பரம் தாலுகாவில் உள்ள ஐந்து யூனியன்களிலே ஆசிரியர்களை நியமிக்கும் விஷயத்திலே ஒரு சில பாதகங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. சட்ட விதிப்படி அரிசனங்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகூட அங்கு அளிக்கப்படவில்லை. நூற்றுக்கு 16

எண் விகிதத்தில் அரிசனங்களை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்று இருக்கும்போது இந்த யூனியன்கள் விஷயத்திலே அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : ஆசிரியர்களை நியமிக்க சில விதி முறைகள் இருக்கின்றன. அப்படி நியமிக்கிறபோது வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பெயர்களைப் பெற்று நியமிக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆசிரியர்கள் நியமனத்தில் வகுப்புவாரி முறைகள் கையாளப் பட வேண்டுமென்ற சட்ட முறைகள் எதுவும் பின்பற்றப்படுவதில்லை. இது நீண்ட காலமாக அமலில் இருந்து வருகின்ற ஒன்று.

கோவை தாலூகாவில் பூதான இயக்க மூலம் கிடைத்த நிலம்

* 203 **வினா—திரு. இரா. மாணிக்கவாசகம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கோவை தாலூகா, பெரிய நாயக்கன் பாளையம் பிர்க்கா, தொண்டாமுத்தூர் பிர்க்கா ஆகியவைகளில் கிடைத்த பூதான பூமி எவ்வளவு ஏக்கர் ?

(இ) அது எந்த அளவுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : (அ) 511 ஏக்கர், 37½ செண்ட்.

(இ) 162 ஏக்கர், 57 செண்ட்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : இந்த மாதிரி விநியோகிக்கப்பட்ட நிலத்தை அவர்கள் விற்றுவிடும்போது அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்க உத்தேசம் , உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அவைகளையெல்லாம் பிரித்துக் கொடுக்கும் பொறுப்பு அந்த வாரியத்தின் தலைவரிடம் ஒப்படைக்கப்பட் டிருக்கிறது. உள்ளூர் குழுவின் தலைவர் அந்தக் காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இதுவரை முடிந்தது போக மீதம் இருப்பவைகளை விரைவாகச் செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

வாரியத் தலைவர், நில நன்கொடையாளர்களில் சிலர் நிலங்களை நிலக் கொடை வேள்வி வாரியத்திடம் ஒப்படைக்கவில்லை எனவும், அந்த நிலங் களை ஒப்படைக்காதிருக்கப் பல்வேறு முறைகளை அவர்கள் மேற்கொள்வ தாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த நிலங்களை விரைவில் பகிர்ந் தளிக்க நடவடிக்கை எடுக்குமாறு நன்கொடைப் பொறுப்பு வகிக்கும் சிறப்புத் துணை . தாசில்தாருக்கு ஆணையிட்டுள்ளதாகவும் அவர் அறிவித் துள்ளார்.

திரு. கே. என். குமாரசாமி : இந்த பூதான நிலங்களை, நிலம் கொடுத்தவர்களே வைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அந்த நிலங் களில் எத்தனை ஏக்கர்கள் ஏழை எளிய நிலமில்லாத உழவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : யார் யாருக்கு எத்தனை ஏக்கர்கள் கொடுக்கப்பட்டன என்ற விவரம் இல்லை.

திரு. என். வரதராஜன் : பூதான இயக்கத்திற்கு அரசு நிதிப் பொறுப்பில் எவ்வளவு உதவி செய்கிறது? அரசு அலுவலர்கள் தரப்பில் எந்த அளவுக்கு உதவி செய்யப்படுகிறது? பூதான இயக்கம் வரவர வலிவிழந்துகொண்டிருக்கிறது என்று சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : கோவை மாவட்டத்தில், பெரிய நாய்க்கன் பாளையம் பிர்க்கா, தொண்டாமுத்தூர் பிர்க்கா ஆகியவற்றில் பூதானத்தின் மூலம் கிடைத்த பூமி எவ்வளவு என்பது கேள்வி. எவ்வளவு அலுவலர்கள், எவ்வளவு நிதி மாநில அரசு உதவி செய்திருக் கிறது போன்ற பல்வேறு கேள்விகளுக்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.